# Padasalai's

## Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group
https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group
https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group
https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group
https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group
https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group
https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group
https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group
https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group
https://t.me/Padasalai_1to5

- TET - Group
https://t.me/Padasalai_TET

- PGTRB - Group
https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group
https://t.me/Padasalai_TNPSC

V

# முதல் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு - 2019

## எட்டாம் வகுப்பு

பதிவு எண் :

நேரம்: 2.30 மணி

## அறிவியல்

மதிப்பெண்கள்: 60

### பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 10 x 1 = 10

1. SI அலகு என்பது ________.
   a) பன்னாட்டு அலகு முறை b) ஒருங்கிணைந்த அலகு முறை
   c) பன்னாட்டு குறியீட்டு முறை d) ஒருங்கிணைந்த குறியீட்டு முறை
2. பொருளின் அளவிற்கான SI அலகு ________.
   a) மீட்டர் b) மோல் c) கெல்வின் d) ஆம்பியர்
3. பாய்மங்களில் கொடுக்கப்படும் அழுத்தம் ________ செயல்படும். a) எல்லா திசைகளிலும்
   b) மேல் பரப்பில் மட்டும் c) அடிப்பகுதியில் மட்டும் d) பக்கவாட்டில் மட்டும்
4. நீரின் ஒளிவிலகல் எண் ________.
   a) 1.0 b) 1.33 c) 1.44 d) 1.52
5. வெப்பநிலைமானிகளில் பயன்படுத்தப்படும் திரவ உலோகம் ________
   a) தாமிரம் b) பாதரசம் c) வெள்ளி d) தங்கம்
6. காகிதம் எரிதல் என்பது ஒரு ________ மாற்றம்.
   a) இயற்பியல் b) வேதியியல் c) இயற்பியல் மற்றும் வேதியியல் d) நடுநிலையான
7. ஆல்காவின் தாவர உடலம் ________ என அழைக்கப்படுகிறது.
   a) தண்டு b) தாலஸ் c) இலை d) வேர்
8. காலனி வடிவில் காணப்படும் பாசிகளுக்கு எடுத்துக்காட்டு ________.
   a) ஆசில்லடோரியா b) நாஸ்டாக் c) வால்வாக்ஸ் d) குளோரெல்லா
9. உணவு ஆக்சிகரணம் அடைந்து ஆற்றலாக மாறும் நிகழ்ச்சி ________ எனப்படும்.
   a) செரிமானம் b) சுவாசித்தல் c) தன்னிலை காத்தல் d) ஊடுபரவல் ஒழுங்குபாடு
10. கணினியின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
    a) மார்டின் லூதர்கிங் b) கிரகாம்பெல் c) சார்லி சாப்ளின் d) சார்லஸ் பாப்பேஜ்

### பகுதி - II

**II. ஏவையேனும் 15 வினாக்களுக்கு விடையளி:** 15 x 2 = 30

11. பொதுவாக உள்ள அளவீட்டு முறைகளின் பெயர்களைத் தருக.
12. 80°C என்பதைக் கெல்வினாக மாற்றுக.
13. ஏறு வரிசையில் எழுதுக: உருளும் உராய்வு, நிலை உராய்வு, நழுவு உராய்வு
14. கடல் கொந்தளிப்பிலிருந்து தங்கள் கப்பலை மாலுமிகள் எவ்வாறு பாதுகாப்பார்கள்?
15. **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக:**
    காலி தண்ணீர் பாட்டில் நீரில் மிதக்கிறது. ஏனெனில் ________.
    ஆனால் செங்கல் நீரில் மூழ்கிவிடுகிறது. ஏனெனில் ________.
    [மேல்நோக்கு விசையை விடக் குறைவான எடை, மேல்நோக்கு விசையை விட அதிகமான எடை, மேல்நோக்கு விசைக்கு சமமான எடை]
16. பொருத்துக:
    a. பன்முக எதிரொளிப்பு - ஒளி வளைதல்
    b. ஒளி விலகல் - கலைடாஸ்கோப்
    c. நிறப்பிரிகை - பரவலான எதிரொளிப்பு
    d. ஒழுங்கற்ற எதிரொளிப்பு - வானவில்
17. ஒளி எதிரொளிப்பிற்கான விதிகளைக் கூறுக.
18. பின்வரும் சேர்மங்களில் உள்ள தனிமங்களின் பெயர்களையும் அவற்றின் குறியீடுகளையும் எழுதுக.
    a) கார்பன் மோனாக்சைடு b) சலவை சோடா
19. நிரப்புக:
    a. தனிமம் : உலோகம், ________, உலோகபோலி . b. சேர்மம் : கரிம சேர்மம், ________
20. காரணம் கூறுக: சோடியமும் பொட்டாசியமும் நீரில் வைக்காமல் மண்ணெண்ணையினுள் வைக்கப்படுகிறது.

Padasalai

www.Padasalai.Net www.TrbTnpsc.com



21. ஒரு வேதிவினை நிகழ்வதற்குத் தேவையான பல்வேறு நிபந்தனைகளை எழுதுக.
22. நிரப்புக:
    a. ஒளியினால் நிகழும் வேதிவினைகளைப் பற்றிய வேதியியலின் ஒரு பிரிவு ________ ஆகும்.
    b. வேதிவினையின் போது வெப்ப ஆற்றலை உருவாக்கும் வேதிவினை ________ வினையாகும்.
23. நுண்ணுயிரிகளின் ஐந்து பிரிவுகள் யாவை?
24. தடுப்பூசி போடுவதன் மூலம் எந்தெந்த நோயைத் தடுக்கலாம்?
25. பின்வருவனவற்றைப் பொருத்துக:

| | | |
|---|---|---|
| a) நைட்ரஜனை நிலைப்படுத்தும் பாக்டீரியா | - | தடுப்பூசி |
| b) காசநோய் | - | பிரியான் |
| c) குரு | - | ரைசோபியம் |
| d) எட்வர்ட் ஜென்னர் | - | பாக்டீரியா |

26. பூஞ்சைகளின் ஏதேனும் இரு பொருளாதார முக்கியத்துவத்தை எழுதுக.
27. கூற்று மற்றும் காரணம் கண்டறிக:
    கூற்று : பெனிசிலின் ஒரு உயிரெதிர்பொருள், பெனிசிலியம் நோட்டேட்டம் என்ற பூஞ்சையிலிருந்து பெறப்படுகிறது.
    காரணம் : இது மற்ற நுண்ணுயிரிகளைக் கொல்லும் அல்லது வளர்ச்சியை தடை செய்யும்.
    a) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது.
    b) கூற்று மட்டும் சரியானது, காரணம் கூற்றை விளக்குவதில்லை.
    c) கூற்று சரியானது, காரணம் கூற்றை விளக்குகிறது
    d) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவையல்ல.
28. மனிதக் கண்ணின் அமைப்பை படம் வரைந்து ஏதேனும் 4 பாகங்களைக் குறிக்கவும்.
29. செல் மாறுபாடடைதல் என்றால் என்ன?
30. பின்வருவனவற்றைப் பொருத்துக:

| | | |
|---|---|---|
| a) விசைப்பலகை | - | நுண்செயலிகள் |
| b) நான்காம் தலைமுறைக் கணினி | - | உள்ளீட்டுக் கருவி |
| c) வன்பொருள் | - | ஒருங்கிணைந்து சுற்று |
| d) மூன்றாம் தலைமுறைக் கணினி | - | RAM |

Padasalai

பகுதி - III

**III. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினா வீதம் 4 வினாக்களுக்கு விடையளி:** 4 x 5 = 20
*(தேவையான இடங்களில் படங்கள் வரைக)*

பிரிவு - 1

31. அடிப்படை அளவுகளை அவற்றின் அலகுகளோடு பட்டியலிடுக.
32. பரப்பு இழுவிசை - வரையறு. பரப்பு இழுவிசையின் 3 பயன்பாடுகளைத் தருக.

பிரிவு - 2

33. ஒளி எதிரொளித்தல் என்றால் என்ன? ஒழுங்கான மற்றும் ஒழுங்கற்ற எதிரொளிப்புகளைப் பற்றி சிறுகுறிப்பு வரைக.
34. உலோகங்களுக்கும், அலோகங்களுக்கும் உள்ள வேறுபாடுகளில் ஏதேனும் நான்கினை அட்டவணைப்படுத்துக.

பிரிவு - 3

35. வினைவேக மாற்றம் என்பதை வரையறுக்க. ஒரு இரும்பு ஆணியை காப்பர் சல்பேட் கரைசலில் வைக்கும் போது என்ன நிகழ்கிறது.
36. மருத்துவத்துறையில் நுண்ணுயிரிகள் எவ்வாறு பயன்படுகின்றன?

பிரிவு - 4

37. ஒருவித்திலை மற்றும் இருவித்திலை தாவரங்களுக்கு இடையே உள்ள ஏதேனும் ஐந்து வேறுபாடுகளை எழுதுக.
38. செல் சுவாசம் என்றால் என்ன? காற்று சுவாசம் மற்றும் காற்றில்லா சுவாசித்தலுக்கு இடையேயான வேறுபாடுகளைத் தருக.

******

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com